# சென்னை கம்பன் கழக 52-ஆவது ஆண்டு விழா இன்று தொடக்கம்

**சென்னை, ஆக. 13:** சென்னை கம்பன் கழகம் சார்பில் 52-ஆவது ஆண்டு கம்பன் விழா 'கம்ப சித்திரத்தில் கண் மயங்கும் வண்ணங்கள்' என்ற மையக் கருத்தை அடிப்படையாகக் கொண்டு சென்னை மயிலாப்பூர் டாக்டர் ராதாகிருஷ்ணன் சாலையில் உள்ள ஏவிஎம் ராஜேஸ்வரி கல்யாண மண்டபத்தில் ஆக. 14, 15, 16 ஆகிய 3 நாள்கள் நடைபெறவுள்ளது.

இதுகுறித்து சென்னை கம்பன் கழகத்தின் தலைவரும், மக்களவை உறுப்பினருமான எஸ்.ஜெகத்ரட்சகன் வெளியிட்ட அறிக்கை:

கம்பன் விழாவின் தொடக்க விழா ஆக. 14-ஆம் தேதி மாலை 5 மணிக்கு நடைபெறவுள்ளது. இந்த விழாவுக்கு உச்சநீதிமன்ற நீதிபதி எம்.எம்.சுந்தரேஷ் தலைமை வகித்து, ஆழ்வார்கள் ஆய்வு மையம் பதிப்பித்துள்ள 'பரம்பொருளின் தகைசால் தம்பியர்' என்ற நூலை வெளியிட்டு, ஆழ்வார்கள் ஆய்வு மையம் நிறுவியுள்ள கம்பர் விருதை கல்லீரல் அறுவை சிகிச்சை நிபுணர் மருத்துவர் முகமது ரேலாவுக்கு வழங்கி சிறப்புரையாற்றுகிறார்.

விழாவில் 19 இலக்கியவாதிகளுக்கு பரிசுகள் வழங்கப்படவுள்ளன. அதேபோன்று சென்னை கம்பன் கழகம் சார்பில் மாநில அளவில் பள்ளி, கல்லூரி மாணவர்களுக்கு திருக்குறள், கம்பராமாயணம், சிலப்பதிகாரம், சீறாப்புராணம், பெரியபுராணம், சீவகசிந்தாமணி ஆகிய 6 இலக்கியங்களில் நடத்திய பேச்சு, கட்டுரை, கவிதைப் போட்டியில் வெற்றி பெற்ற மாணவ, மாணவிகளுக்குப் பரிசுகள் வழங்கப்படவுள்ளன.

முதல் நாள் நிகழ்வில், த.இராமலிங்கம், இலங்கை ஜெயராஜ் உள்ளிட்டோர் உரையாற்றவுள்ளனர். 2-ஆம் நாளான சனிக்கிழமை தளிர் உரை, எண்மர் முழங்கும் எண்சுவை அரங்கம், இளமையில் ஆடும் இளமயில் அரங்கம், கம்பனைப் போற்றும் காளமேகங்கள் ஆகிய நிகழ்ச்சிகள் நடைபெறும்.

தொடர்ந்து, 3-ஆம் நாளான ஞாயிற்றுக்கிழமை எழிலுரை, வித்தகம் தெரிக்கும் வினா-விடை மேடை, அருந்தமிழ் ஆய்வுரை உள்ளிட்ட நிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளன. மாலை 5 மணிக்கு 'பன்னருங்கலைஞர் பட்டிமண்டபம்' தேசிய மனித உரிமைகள் ஆணையத்தின் தலைவர் வெ.ராமசுப்பிரமணியன் தலைமையில் நடைபெறவுள்ளது. இதில் மா.இராமலிங்கம், பர்வீன் சுல்தானா, தெய்வானை மணிகண்டன், விஜயகிருஷ்ணன், பிரியா ராமச்சந்திரன், பெபசியா பானு, அபுதாபி பாஸ்கர், தெய்வநாயகி கார்த்திகேயன், தகிருமாறன் ஆதியோர் உரையாற்றவுள்ளனர். கம்பன் கழக நிகழ்ச்சிகளை சென்னை கம்பன் கழகத்தின் செயலர் சாரதா நம்பி ஆரூரன் ஒருங்கிணைக்கவுள்ளார். கவிஞர் கங்கை மணிமாறன் நிகழ்ச்சி நெறியாள்கை செய்கிறார்.

# இலங்கைக் கடற்படையினரால் ராமேசுவரம் மீனவர்கள் 9 பேர் கைது



கச்சத்தீவு அருகே புதன்கிழமை நள்ளிரவு இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்ட ராமேசுவரம் மீனவர்கள்.

**ராமேசுவரம், ஆக. 13:** கச்சத்தீவு-மன்னார் இடையே புதன்கிழமை நள்ளிரவு மீன்பிடித்துக் கொண்டிருந்த ராமேசுவரம் மீனவர்கள் 9 பேரை இலங்கைக் கடற்படையினர் கைது செய்தனர். ஒரு விசைப் படகு பறிமுதல் செய்யப்பட்டது.

ராமநாதபுரம் மாவட்டம், ராமேசுவரம் மீன்பிடி இறங்குதளத்திலிருந்து புதன்கிழமை 279 விசைப் படகுகளில் 2,200-க்கும் மேற்பட்ட மீனவர்கள் மீன்வளத் துறை அனுமதி பெற்று கடலுக்குள் மீன்பிடிக்கச் சென்றனர்.

இவர்கள் புதன்கிழமை நள்ளிரவு கச்சத்தீவு- மன்னார் இடையே மீன்பிடித்துக் கொண்டிருந்த போது, 5 ரோந்துப் படகுகளில் வந்த இலங்கைக் கடற்படையினர் மீனவர்களை மீன்பிடிக்க விடாமல் விரட்டியடித்தனர். அப்போது, ராமேசுவரம் தங்கச்சிமடத்தைச் சேர்ந்த வெலிங்டன் என்பவருக்குச் சொந்தமான விசைப் படகைப் பறிமுதல் செய்தனர்.

மேலும், இந்தப் படகிலிருந்த மீனவர்கள் ஜனதன் (45), அந்தோணி(38), பிரபு (43), டான் போஸ்கோ (55), ஆரோக்கிய டெவின் (31), வெள்ளைச்சாமி (51), சுப்பையா (52), ஆரோக்கிய ஜெனிஸ்டன் (25), ஸ்டெலின் (30) ஆகிய 9 பேரைக் செய்தனர். இதையடுத்து, பறிமுதல் செய்யப்பட்ட படகுடன் 9 மீனவர்களையும் மன்னார் கடற்படை முகாமுக்கு இலங்கைக் கடற்படையினர் கொண்டு சென்று, நீரியல் துறையினரிடம் ஒப்படைத்தனர்.

எல்லை தாண்டி மீன்பிடித்ததாக மீனவர்கள் மீது வழக்குப் பதிந்து, மன்னார் நீதிமன்றத்தில் வியாழக்கிழமை முன்னிலைப் படுத்தினர். இவர்களை வருகிற 25-ஆம் தேதி வரை நீதிமன்றக் காவலில் வைக்க நீதிபதி உத்தரவிட்டார். இதையடுத்து, மீனவர்கள் 9 பேரும் வவுனியா சிறையில் அடைக்கப்பட்டனர்.

கடந்த வாரம் இலங்கைக் கடற்படையினரால் ராமேசுவரம் மீனவர்கள் 11 பேர் கைது செய்யப்பட்ட நிலையில், தற்போது மேலும் 9 மீனவர்கள் கைது செய்யப்பட்ட சம்பவம் ராமேசுவரம் மீனவர்களிடையே பெரும் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.

**மீனவ சங்கம் கோரிக்கை:** இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்ட ராமேசுவரம் மீனவர்கள் 9 பேரையும், பறிமுதல் செய்யப்பட்ட விசைப் படகையும் விடுவிக்க மத்திய, மாநில அரசுகள் உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என ராமேசுவரம் மீனவ சங்கத்தினர் கோரிக்கை விடுத்தனர்.

## மீனவர்களை மீட்க நடவடிக்கை தேவை

### மத்திய வெளியுறவு அமைச்சருக்கு முதல்வர் கடிதம்



**சென்னை, ஆக. 13:** இலங்கைக் கடற்படையால் கைது செய்யப்பட்ட ராமேசுவரம் மீனவர்களை மீட்க உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் ஜெய்சங்கருக்கு முதல்வர் சி.ஜோசப் விஜய் கடிதம் எழுதியுள்ளார்.

இதுகுறித்து அவர் வியாழக்கிழமை எழுதிய கடிதம்:

கடந்த 12-ஆம் தேதி இரவு இயந்திரப் படகில் மீன்பிடிக்கச் சென்ற ராமநாதபுரம் மாவட்டம் ராமேசுவரத்தைச் சேர்ந்த 9 மீனவர்களை இலங்கைக் கடற்படையினர் கைது செய்துள்ளனர். இந்த மாதத்தில் மட்டும் இதுபோன்று இரு சம்பவங்கள் நடந்துள்ளன.

தமிழக மீனவர்கள் தொடர்ந்து கைது செய்யப்படுவது, மீனவ சமூகத்தினரிடையே, குறிப்பாக தமிழ்நாட்டின் கடலோர மாவட்டங்களில், மிகுந்த கவலையையும் பாதுகாப்பற்ற உணர்வையும் ஏற்படுத்தி வருகிறது. இதுவரை 49 தமிழக மீனவர்கள் இலங்கை அரசால் சிறைக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

எனவே, தூதரக நடவடிக்கைகள் மூலம் இலங்கை அரசிடம் இக்கோரிக்கையை முன்வைத்து, சிறைபிடிக்கப்பட்டுள்ள மீனவர்களையும் அவர்களின் மீன்பிடிப் படகுகளையும் விரைவாக விடுவித்து, அவர்கள் பாதுகாப்பாக தாய்நாடு திரும்புவதற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

மேலும், இதுபோன்ற சம்பவங்கள் தொடர்ந்து நிகழ்வதால் தாங்கள் தலையிட்டு நடவடிக்கை மேற்கொள்வது, பாதிக்கப்பட்ட மீனவர்களின் குடும்பங்களுக்கும், தமிழ்நாட்டு மீனவ சமூகத்தினருக்கும் இவ்விவகாரத்தில் பெரும் நம்பிக்கையையும் நிம்மதியையும் அளிக்கும் என தனது கடிதத்தில் தெரிவித்துள்ளார் முதல்வர் விஜய்.

# ரூ.5.54 கோடியில் முதல்வரின் அலுவலகம் அமைக்க ஒப்பந்தம் கோரல்

**சென்னை, ஆக. 13:** சென்னை ஜார்ஜ் கோட்டை வளாகத்தில் உள்ள நாமக்கல் கவிஞர் மாளிகையில் முதல்வர் ஜோசப் விஜய்யின் புதிய அலுவலகத்தை 3 மாதங்களில் அமைக்கும் பணிகளுக்காக ரூ.5.54 கோடியில் தமிழக அரசின் பொதுப் பணித் துறை ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ளது.

நிர்வாக வசதிக்காக முதல் தளத்தில் உள்ள முதல்வர் விஜய்யின் அலுவலகம் தலைமைச் செயலகம் அருகே உள்ள நாமக்கல் கவிஞர் மாளிகையின் 10-ஆவது தளத்துக்கு மாற்றப்படுகிறது.

அந்த தளத்தில் முதல்வர் அறை, தனிச் செயலர்களுக்கான அலுவலகங்கள், நவீன ஆலோசனைக் கூட்ட அரங்கம் உள்ளிட்ட பல்வேறு வசதிகளை அமைக்கும் பணிகள் தொடங்கியுள்ளன.

இந்த நிலையில், நாமக்கல் கவிஞர் மாளிகையின் 10-ஆவது தளத்தில் மொத்தம் 3 பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு, ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது. அதன்படி, பிரிவு 1-இல் ரூ.2.41 கோடிக்கு நிர்வாக அலுவலக வசதிகளை மேம்படுத்தவும், பிரிவு 2-இல் ரூ.2.01 கோடியில் உள்கட்டமைப்பு பணிகளுக்கும், பிரிவு 3-இல் ரூ.1.12 கோடிக்கு இதர பணிகளுக்கும் என மொத்தம் ரூ.5.54 கோடிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது.

ஒப்பந்தம் இறுதி செய்யப்பட்ட தேதியிலிருந்து 3 மாதங்களுக்குள் அனைத்துப் பணிகளையும் முழுமையாக முடித்து ஒப்படைக்க வேண்டும் என்று பொதுப் பணித் துறை சார்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.


बैंक ऑफ़ बड़ौदा Bank of Baroda

மண்டல அலுவலக ஒடுக்கப்பட்ட சொத்து மீட்பு கிளை (ROSARB), சென்னை கிராமப்புற பிராந்தியம், எண்.123, துகார் டவர்ஸ், R.L.சாலை, எழும்பூர், சென்னை - 600 008. போன்:044- 2888 5428 E-mail:sarcmt@bankofbaroda.com

**அசையா சொத்துக்களுக்கான விற்பனை அறிவிப்பு**

"APPENDIX- IV-A [See proviso to Rule 6 (2) & 8 (6)]

**கடனீட்டு சொத்துக்களை ரொக்கமாக்குதல் நிதிச் சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டு சொத்துக்கள் அமலாக்கச் சட்டம் 2002 மற்றும் உரிமை அமலாக்கச்சட்டம் 2002 விதி 6(2) & 8 (6) சேர்த்து வாசிக்கவும். இதன் படி அடமானம் வைக்கப்பட்டுள்ள கீழே குறிப்பிட்டுள்ள அசையா சொத்துக்களை மின்ஏலம் மூலம் விற்பனை செய்வதற்கான அறிவிப்பு.**

இதன் மூலம் பொதுமக்களுக்கும், குறிப்பாக கடன்தாரர்கள், அடமானதாரர்கள் மற்றும் ஜாமீன்தாரர்களுக்கும் கடன் கொடுத்த வங்கியானது கீழே விரிவாக குறிப்பிட்டுள்ள அடமானம் வைக்கப்பட்டுள்ள அசையும் சொத்துக்களை பேங்க் ஆப் பரோடா வங்கியின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி அவர்களால் **அசல் சுவாதினத்தில்** எடுத்துக் கொண்டுள்ளதை அடுத்து கீழே குறிப்பிட்டுள்ள செலுத்த வேண்டிய கடன் தொகையை வசூலிப்பதற்காக கீழே குறிப்பிட்டுள்ள அடமான சொத்துக்களை **"உள்ள இடத்தில் உள்ளவாறு" "உள்ளது உள்ளபடியே" மற்றும் "எந்த நிலையில் உள்ளதோ அந்த நிலையிலேயே"** என்ற அடிப்படையில் விற்கப்படும் என்பதை இந்த அறிவிப்பு வழங்கப்படுகிறது. கடன்தாரர்கள்/ அடமானதாரர்கள் / ஜாமீன்தாரர்கள் / கடனீட்டு சொத்துக்கள் / நிலுவை தொகை/ குறைந்த பட்ச விலை / மின் ஏலதேதி மற்றும் நேரம், முன்வைப்பு தொகை மற்றும் ஏல உயர்வு தொகை போன்றவைகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

**வ.எண். 1 : கடன்தாரர்கள்/ஜாமீன்தாரர்கள்/அடமானதாரர்கள் பெயர் மற்றும் முகவரி :** கடன்தாரர்-1: திருமதி. தேவகி பூபதி, பழைய எண்.273, புதிய எண்.167, தர்மராஜா கோவில் தெரு, கிழ்ப்பாக்கம் கார்டன் சாலை, சென்னை, தமிழ்நாடு - 600 010 **திருமதி. தேவகி பூபதி உரிமையாளர்: M/s Kay kay Mobile accessories and stationery**, எண்.273, புதிய எண்.167, தர்மராஜா கோவில் தெரு, கிழ்ப்பாக்கம் கார்டன் சாலை, சென்னை, தமிழ்நாடு - 600 010. **மொத்த நிலுவை தொகை: 13-08-2026 அன்று வரை ரூ.40,01,094/-** மேலும் 08-08-2026 முதல் பின்வட்டி மற்றும் பிற சட்ட செலவுகள் உட்பட.

**தெரிந்தவரை ஏதேனும் வில்லங்கங்களுடன் கூடிய விரிவான குறிப்பிடப்பட்டுள்ள அசையா சொத்துகள்:** [illegible]

| குறைந்த பட்ச விலை: ரூ.2,70,000/- | முன் வைப்பு தொகை: ரூ.27,000/- | ஏல உயர்வு தொகை: ரூ. 25,000/- |
|---|---|---|

| | |
|---|---|
| மின் ஏலம் நடைபெறும் தேதி மற்றும் நேரம் | 08.09.2026 அன்று பிற்பகல் 2.00 மணி முதல் மாலை 6.00 மணி வரை |
| சொத்துக்களை பார்வையிடும் தேதி மற்றும் நேரம் | 01.09.2026 அன்று பிற்பகல் 1.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை |

விற்பனைக்கான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளின் விவரங்களை https://www.bankofbaroda.in/e-auction.htm மற்றும் ஆன்லைன் போர்ட்டல் https://baanknet.com மேலும் விலைப்புள்ளிதாரர்கள் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியை தொலைபேசி எண். 044-28885428 - கைபேசி எண். 8940056367-ல் தொடர்பு கொள்ளவும்.

விரிவான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு இங்கு ஸ்கேன் செய்யவும்

தேதி : 13.08.2026 இடம் : சென்னை

அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, பேங்க் ஆஃப் பரோடா

बैंक ऑफ़ बड़ौदा Bank of Baroda

மண்டல அலுவலக ஒடுக்கப்பட்ட சொத்து மீட்பு கிளை (ROSARB), சென்னை கிராமப்புற பிராந்தியம், எண்.123, துகார் டவர்ஸ், R.L.சாலை, எழும்பூர், சென்னை - 600 008. போன்:044- 2888 5428 E-mail:sarcmt@bankofbaroda.com

**அசையா சொத்துக்களுக்கான விற்பனை அறிவிப்பு**

"APPENDIX- IV-A [See proviso to Rule 6 (2) & 8 (6)]

**கடனீட்டு சொத்துக்களை ரொக்கமாக்குதல் நிதிச் சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டு சொத்துக்கள் அமலாக்கச் சட்டம் 2002 மற்றும் உரிமை அமலாக்கச்சட்டம் 2002 விதி 6(2) & 8 (6) சேர்த்து வாசிக்கவும். இதன் படி அடமானம் வைக்கப்பட்டுள்ள கீழே குறிப்பிட்டுள்ள அசையா சொத்துக்களை மின்ஏலம் மூலம் விற்பனை செய்வதற்கான அறிவிப்பு.**

இதன் மூலம் பொதுமக்களுக்கும், குறிப்பாக கடன்தாரர்கள், அடமானதாரர்கள் மற்றும் ஜாமீன்தாரர்களுக்கும் கடன் கொடுத்த வங்கியானது கீழே விரிவாக குறிப்பிட்டுள்ள அடமானம் வைக்கப்பட்டுள்ள அசையும் சொத்துக்களை பேங்க் ஆப் பரோடா வங்கியின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி அவர்களால் **அசல் சுவாதினத்தில்** எடுத்துக் கொண்டுள்ளதை அடுத்து கீழே குறிப்பிட்டுள்ள செலுத்த வேண்டிய கடன் தொகையை வசூலிப்பதற்காக கீழே குறிப்பிட்டுள்ள அடமான சொத்துக்களை **"உள்ள இடத்தில் உள்ளவாறு" "உள்ளது உள்ளபடியே" மற்றும் "எந்த நிலையில் உள்ளதோ அந்த நிலையிலேயே"** என்ற அடிப்படையில் விற்கப்படும் என்பதை இந்த அறிவிப்பு வழங்கப்படுகிறது. கடன்தாரர்கள்/ அடமானதாரர்கள் / ஜாமீன்தாரர்கள் / கடனீட்டு சொத்துக்கள் / நிலுவை தொகை/ குறைந்த பட்ச விலை / மின் ஏலதேதி மற்றும் நேரம், முன்வைப்பு தொகை மற்றும் ஏல உயர்வு தொகை போன்றவைகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

**வ.எண். 1 : கடன்தாரர்கள்/ஜாமீன்தாரர்கள்/அடமானதாரர்கள் பெயர் மற்றும் முகவரி :** **கடன்தாரர்-1: திரு. சந்திரசேகரன் சுந்தர், கடன்தாரர்-2: திரு.கிர்த்திவாசன் சுந்தர், கடன்தாரர்-3: திரு.கார்த்திக் விக்னேஷ் சுந்தர், அனைவரின் முகவரி:** மனை எண்.1, 41வது தெரு, தில்லை கங்கா நகர், நங்கநல்லூர், ஆலந்தூர், காஞ்சிபுரம், சென்னை - 600 061. **மொத்த நிலுவை தொகை: 13-08-2026 அன்று வரை ரூ.1,19,59,558.30/-** மேலும் **08-08-2026** முதல் பின்வட்டி மற்றும் பிற சட்ட செலவுகள் உட்பட.

**தெரிந்தவரை ஏதேனும் வில்லங்கங்களுடன் கூடிய விரிவான குறிப்பிடப்பட்டுள்ள அசையா சொத்துகள்:**

**சொத்து எண்.1 : (மனை எண்.1, 9 & 12) :** திருச்சி மாவட்டம், அரியமங்கலம் மண்டலம், ஆலத்தூர் கிராமம், சர்வே எண்.282/4, டவுன் சர்வே எண்.63/1, பிளாக் எண்.48, வார்டு எண்.T, 03.04.2018 தேதியிட்ட DTCP அங்கீகார மனைப்பிரிவு எண்.15/2017ன்படி விவேகானந்தா நகர் விரிவாக்கம் என்ற மனைப்பிரிவில் மனை எண்.1,9 மற்றும் 12 தொடர்புடைய 3821 + 1672 + 1055 சேர்த்து மொத்த பரப்பளவு 6548 சதுர அடி சொத்து. மேலும் அதனுடன் இணைந்த அனைத்து துண்டுகளும், பகுதிகளும். மொத்த நிலத்திற்கான எல்லைகள் **மனை எண்.1 : (பரப்பளவு - 3821 சதுர அடி) எல்லைகள் :** வடக்கில் : மனைப்பிரிவு எல்லை, தெற்கில் : மனை எண்.2, 3, 4, மேற்கில் : மனைப்பிரிவு எல்லை சர்வே எண், கிழக்கில் : 20 அடி அகல தெற்கு வடக்கான சாலை. அளவுகள் : வடக்கு பகுதியில் - 90 அடி, தெற்கு பகுதியில் - 90 அடி, கிழக்கு பகுதியில் - 45 அடி, மேற்கு பகுதியில் - 39.6 அடி, மொத்த பரப்பளவு - 3821 சதுர அடி. [illegible]

| குறைந்த பட்ச விலை: ரூ.70,69,000/- | முன் வைப்பு தொகை: ரூ.7,06,900/- | ஏல உயர்வு தொகை: ரூ. 25,000/- |
|---|---|---|

**சொத்து எண்.2 : (மனை எண்.92) :** [illegible]

| குறைந்த பட்ச விலை: ரூ.22,27,000/- | முன் வைப்பு தொகை: ரூ.2,22,700/- | ஏல உயர்வு தொகை: ரூ. 25,000/- |
|---|---|---|

| | |
|---|---|
| மின் ஏலம் நடைபெறும் தேதி மற்றும் நேரம் | 31.08.2026 அன்று பிற்பகல் 2.00 மணி முதல் மாலை 6.00 மணி வரை |
| சொத்துக்களை பார்வையிடும் தேதி மற்றும் நேரம் | 24.08.2026 அன்று பிற்பகல் 3.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை |

விற்பனைக்கான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளின் விவரங்களை https://www.bankofbaroda.in/e-auction.htm மற்றும் ஆன்லைன் போர்ட்டல் https://baanknet.com மேலும் விலைப்புள்ளிதாரர்கள் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியை தொலைபேசி எண். 044-28885428 - கைபேசி எண். 8940056367-ல் தொடர்பு கொள்ளவும்.

விரிவான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு இங்கு ஸ்கேன் செய்யவும்

தேதி : 13.08.2026 இடம் : சென்னை

அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, பேங்க் ஆஃப் பரோடா

केनरा बैंक Canara Bank — கனரா வங்கி

சிறப்பு சொத்து மீட்பு மேலாண்மை கிளை 2, சென்னை [7901] எண். 9 & 10 சர் தியாகராய சாலை, தியாகராய நகர், சென்னை - 17. Mobile: 9740145622 Email : cb7901@canarabank.com

**அசையா சொத்துக்கள் விற்பனைக்கான மின்-ஏல விற்பனை அறிவிப்பு**

**கடனீட்டு சொத்துக்கள் ரொக்கமாக்குதல் மற்றும் நிதிச் சொத்துக்கள் மறு சீரமைத்தல் கடனீட்டு சொத்துக்கள் மீதான உரிமை அமலாக்க சட்டம், 2002, பிணையநலன் (அமலாக்கம்) விதிகள் 2002-ன் விதி 8(6)-ன்கீழ் அசையா சொத்துக்களின் விற்பனைக்கான மின்-ஏல விற்பனை அறிவிப்பு**

பொதுமக்களுக்கு பொதுவாகவும், கடன்தாரர்களுக்கு மற்றும் ஜாமீன்தாரர்களுக்கு குறிப்பாகவும் இதன் மூலம் அறிவிப்பது யாதெனில் கீழே விவரிக்கப்பட்ட வங்கியில் அடமானம் வைத்துள்ள அசையா சொத்துக்கள் மற்றும் கடன் வழங்கிய வங்கிக்கு கடனுக்காக ஈடுசெய்யப்பட்டுள்ள அசையா சொத்துக்களை **கனரா வங்கி, சிறப்பு சொத்து மீட்பு மேலாண்மை கிளை 2 (7901) சென்னை**-யின் அதிகாரப்பூர்வ அதிகாரியால் ஆக்கப்பூர்வ சுவாதீனம் செய்துள்ள சொத்துக்களை கடன்தாரர்/ ஜாமீன்தாரர்கள் செலுத்த வேண்டிய பாக்கித் தொகைகளை வசூலிக்கும் பொருட்டு, **"உள்ளது உள்ளபடி, உள்ளது உள்ளவாறு" மற்றும் "உள்ள இடத்தில் உள்ளவாறு" என்கிற அடிப்படையில் 31.08.2026 அன்று காலை 11.00 மணி முதல் பகல் 12.00 மணி வரை** (விற்பனை முடியும் வரை ஒவ்வொன்றிற்கும் 5 நிமிட கால அவகாசம் வரம்பற்ற நீட்டிப்புடன்) விற்பனை செய்யப்பட உள்ள மின் ஏல விற்பனை அறிவிப்பு இதன் மூலம் வெளியிடப்படுகிறது.

**கடன்தாரர்கள் பெயர் மற்றும் முகவரி : M/s பிரபாகரன் ஒப்பந்ததாரர் உரிமை: பிரபாகரன் A,** எண்.55, தண்ணீர் பந்தல்மேடு, வயலூர் கிராமம் மற்றும் அஞ்சல், கல்பாக்கம், தமிழ்நாடு - 603102 மற்றும் **திரு. பிரபாகரன் A** த/பெ. அசலியப்பன், எண்.55, அம்பேத்கர் தெரு, வயலூர், கல்பாக்கம், தமிழ்நாடு -603102.

**நிலுவைத்தொகை : 31.07.2026 அன்றைய தேதியில் ரூ.24,99,887.10** (ரூபாய் இருபத்தி நான்கு இலட்சத்து தொண்ணூற்றி ஒன்பதாயிரத்து எண்ணூற்றி எண்பத்தி ஏழு மற்றும் பைசா பத்து மட்டும்) மற்றும் எதிர்கால வட்டி உட்பட.

**சொத்தின் விவரம் :**

நிலம் மற்றும் கட்டிடம் மற்றும் அதனை சார்ந்த அனைத்து பகுதிகளும், பழைய ச.எண். 37/3, புதிய ச.எண். 193/9 பட்டா எண்.13 மற்றும் பரப்பு 915 சதுர அடி, அத்துடன் தரை தளம் மற்றும் முதல் தளம் கட்டப்பட்ட ஒரு குடியிருப்பு வீடு, மின்சாரம் சர்வீஸ் இணைப்பு எண். 510-010-970 இது வயலூர் கிராமம், திருக்கழுக்குன்றம் தாலுகா, செங்கல்பட்டு மாவட்டம், திருக்கழுக்குன்றம் சார்-பதிவு மாவட்டம் மற்றும் செங்கல்பட்டு பதிவு மாவட்டத்திற்கு உட்பட்டது. இதன் எல்லைகள்: வடக்கில்: திரு. முனுசாமி அவர்களுக்குச் சொந்தமான சொத்து, தெற்கில்: சாலை, கிழக்கில்: திரு. ஏகாம்பரம் அவர்களுக்குச் சொந்தமான சொத்து, மேற்கில்: திருமதி. முருகம்மாள் அவர்களுக்குச் சொந்தமான சொத்து. அளவுகள்: வடக்கில்: 21 அடி 5 அங்குலம், தெற்கில்: 24 அடி 2 அங்குலம், கிழக்கில்: 40 அடி, மேற்கில்: 40 அடி. CERSAI ID : 400057283525

| குறைந்தபட்ச தொகை: ரூ.22,50,000/- | EMD: ரூ.2,25,000/- | ஏலம் உயர்வு: ரூ.25,000/- |
|---|---|---|

[illegible]

| குறைந்தபட்ச தொகை: ரூ.32,00,000/- | EMD: ரூ.3,20,000/- | ஏலம் உயர்வு: ரூ.50,000/- |
|---|---|---|

[illegible]

| குறைந்தபட்ச தொகை: ரூ.3,65,00,000/- | EMD: ரூ.36,50,000/- | ஏலம் உயர்வு: ரூ.1,00,000/- |
|---|---|---|

[illegible]

| குறைந்தபட்ச தொகை: ரூ.62,00,000/- | EMD: ரூ.6,20,000/- | ஏலம் உயர்வு: ரூ.50,000/- |
|---|---|---|

மின்-ஏலம் நாள் மற்றும் நேரம் : 31/08/2026 & நேரம் : காலை 11.00 மணிமுதல் பகல் 12.00 மணி வரை [illegible]

Portal of E-Auction: https://baanknet.com

தேதி : 13.08.2026 இடம் : சென்னை

அதிகாரபூர்வ அதிகாரி கனரா வங்கி

केनरा बैंक கனரா வங்கி

சிறப்பு சொத்து மீட்பு மேலாண்மை கிளை II, சென்னை [7901] எண்.9 & 10, சர் தியாகராய சாலை, தியாகராய நகர், சென்னை -17 தொலைபேசி எண். 9740145622 மின்னஞ்சல் : cb7901@canarabank.com

**மின்னணு ஏல விற்பனை அறிவிப்பு**

கடனீட்டு சொத்துக்கள் ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை மறு சீரமைத்தல் கடனீட்டு சொத்துக்கள் மீதான உரிமை அமலாக்க சட்டம், 2002, பிணையநலன் (அமலாக்கம்) விதிகள் 2002 ன் விதி 8 (6) & 9 உடன் கீழ் அசையா சொத்துக்களின் விற்பனைக்கான மின்-ஏல விற்பனை அறிவிப்பு.

பொதுமக்களுக்கு பொதுவாகவும், கடன்தாரர்களுக்கு மற்றும் ஜாமீன்தாரர்களுக்கு, குறிப்பாகவும் இதன் மூலம் அறிவிப்பது யாதெனில் கீழே விவரிக்கப்பட்ட வங்கியில் அடமானம் வைத்துள்ள அசையா சொத்துக்கள் மற்றும் கடன் வழங்கிய வங்கிக்கு கடனுக்காக ஈடுசெய்யப்பட்டுள்ள அசையா சொத்துக்களை **கனரா வங்கியின்** அதிகாரப்பூர்வ அதிகாரியால் **ஆக்கப்பூர்வ / அடையாளபூர்வ / மெய்நிலை சுவாதீனம்** செய்துள்ள சொத்துக்களை கடன்தாரர் / ஜாமீன்தாரர்கள் செலுத்த வேண்டிய பாக்கித் தொகைகளை வசூலிக்கும் பொருட்டு, **"உள்ளது உள்ளபடி, உள்ளது உள்ளவாறு", மற்றும் "உள்ள இடத்தில் உள்ளவாறு என்கிற அடிப்படையில் 31.08.2026** அன்று **காலை 11.00 மணி** முதல் **நண்பகல் 12.00 மணி வரை (5 நிமிட காலநீட்டிப்புடன் விற்பனை முடியும் வரை தொடர்ந்து நடைபெறும்)** விற்பனை செய்யப்பட உள்ள மின் ஏல விற்பனை அறிவிப்பு இதன் மூலம் வெளியிடப்படுகிறது.

**வ.எண்.1:** சென்னை சிறப்பு சொத்து மீட்பு மேலாண்மை கிளை II :**கடன்தாரர் பெயர் & முகவரி: 1) திருமதி. சைலஜா.K (கடன்தாரர் & அடமானதாரர்)** பழைய எண்.37, புதிய எண்.39-8, நைனியப்பன் தெரு, சிந்தாதிரிப்பேட்டை, சென்னை - 600002. மேலும் ஒரு முகவரி: பழைய எண்கள். 3 முதல் 34 வரை, புதிய எண்.24, சிட்டி சென்டர் பிளாசா, 5வது தளம், கடை எண், 2 & 3, வாலாஜா சாலை, அண்ணா சாலை, சென்னை-600 002. **2) திரு. கோபி.G (ஜாமீன்தாரர்),** 31/2, மூக்கு தெரு, கொசப்பேட்டை, சென்னை - 600012.

**கடன் நிலுவைத் தொகை: 31/07/2026 அன்றுள்ளபடி ரூ.1,81,86,853.30** அதனுடன் பொருந்தக்கூடிய வட்டி.

**சொத்தின் விவரங்கள்: திருமதி. சைலஜா.K அவர்களின் பெயரில் உள்ள சொத்து:** திருவல்லிக்கேணி சார்பதிவு மாவட்டத்திற்குட்பட்ட, சர்வே எண்.199 முதல் 201 வரை R. சர்வே எண்.10 மற்றும் சர்வே எண்.8 பகுதி இல் அடங்கிய சென்னை -600002, மவுண்ட் ரோடு (அண்ணா சாலை), பழைய கதவு எண்.3 முதல் 34வரை புதிய எண்.24 பரப்பளவு (12767சதுர அடியில்) பிரிக்கப்படாத பங்கு 678 சதுர அடி நிலம் மற்றும் அதில் சிட்டி சென்டர் பிளாசா என்ற பெயரில் கட்டப்பட்டுள்ள கட்டிடம் அதனைச் சார்ந்த அனைத்து துண்டு மற்றும் பகுதி, எல்லைகள்: வடக்கில்: வாலாஜா சாலை; தெற்கில்: R. சர்வே எண்.120; கிழக்கில்: எல்லிஸ் சாலை; மேற்கில்: R. சர்வே எண்.11 & 12; 678/12767, 5வது தளத்தில் அலுவலகக் கட்டிடம் கடை எண்.2 & 3 இன் கட்டுமானப் பரப்பு 3087சதுர அடி.

| குறைந்தபட்சகேட்பு விலை ₹ 1,76,00,000/- | டேவணித்தொகை ₹ 17,60,000/- | ஏலஉயர்வுத்தொகை ₹ 1,00,000/- |
|---|---|---|

**வ.எண்.2:** சென்னை மவுண்ட் ரோடு கிளை - **கடன்தாரர் பெயர் & முகவரி: 1. M/s.Venture Tradelinks, பிரதிநிதியாக அதன் உரிமையாளர் திருமதி. நிர்மலா திலிப் குமார்,** எண்.4, F11, பாலவி நகர், Kuv Eye AM Optics பாலவி நகர், சென்னை – 600063. **மேலும் ஒரு முகவரி:** ஃப்ளாட் எண்.F-11, முதல் தளம், இராயல் ஹோம்ஸ், முடிச்சூர் சாலை, பழைய பெருங்களத்தூர், ஸ்ரீனிவாசா நகர், சென்னை – 600063. **மேலும் ஒரு முகவரி:** மனை எண்.33, 34, 35, சடையாங்குப்பம், திருவள்ளூர் மாவட்டம் - 600103. **2. திருமதி. நிர்மலா திலிப்குமார், க/பெ. திரு. திலிப்குமார்,** ஃப்ளாட் எண்.F-11, முதல் தளம், இராயல் ஹோம்ஸ், முடிச்சூர் சாலை, பழைய பெருங்களத்தூர், ஸ்ரீனிவாசா நகர், சென்னை – 600063. **3. திரு. திலிப்குமார் த/பெ. திரு. லால்சந்த் காந்தி,** ஃப்ளாட் எண்.F-11, முதல் தளம், இராயல் ஹோம்ஸ், முடிச்சூர் சாலை, பழைய பெருங்களத்தூர், ஸ்ரீனிவாசா நகர், சென்னை-600063. [illegible]

| குறைந்தபட்சகேட்பு விலை ₹ 48,60,000/- | டேவணித்தொகை ₹ 4,86,000/- | ஏலஉயர்வுத்தொகை ₹ 25,000/- |
|---|---|---|

| குறைந்தபட்சகேட்பு விலை ₹ 48,60,000/- | டேவணித்தொகை ₹ 4,86,000/- | ஏலஉயர்வுத்தொகை ₹ 25,000/- |
|---|---|---|

**சொத்து எண்.3: (அடமானத்தின் MODTD ஆவண எண்.6194/2024 மற்றும் துணை ஆவண எண்.9863/2024 மற்றும் ஒப்பந்த ஆவண எண்.4313/2024 இன்படி திரு. திலிப்குமார் அவர்களின் பெயரில் உள்ள சொத்து), Cersai Id : 400091151318** தாம்பரம் பதிவு மாவட்டம் மற்றும் பல்லாவரம் சார்பதிவு மாவட்டத்திற்குட்பட்ட, காஞ்சிபுரம் மாவட்டம் தற்போது செங்கல்பட்டு மாவட்டம், தாம்பரம் வட்டம் தற்போது பல்லாவரம் வட்டம், நெமிலிச்சேரி கிராமத்தின் கிராம நத்தம் சர்வே எண்.178, நகர சர்வே நிலப்பதிவேட்டின்படி வார்டு-G, பிளாக் எண்.1, நகர சர்வே எண்.29, நகர சர்வே எண் இன் சர்வே எண்.178பகுதி இல் அடங்கிய குரோம்பேட்டை, பாரதிபுரம், கக்கன் தெருவில் அமைந்துள்ள 1320 சதுர அடியின் 1065சதுர அடியில் பிரிக்கப்படாத பங்கு 340சதுர அடி நிலம் அதனுடன் அதில் கட்டப்பட்டுள்ள மூடிய கார் நிறுத்தும் பரப்பு, 3 ஃபேஸ் EB & Lift, பொதுப்பரப்பு உட்பட) "i5 Homes", என்ற பெயரில் கட்டிடத்தில் மூன்றாம் தளத்தில் பரப்பளவு 1280சதுர அடி சூப்பர் கட்டிடப் பரப்பு கொண்ட குடியிருப்பு ஃப்ளாட் எண். T1, அதனைச் சார்ந்த அனைத்து துண்டு மற்றும் பகுதி, அதனுடன் அமைப்புகள் மற்றும் பொருத்திகள், **நிலத்தின் மொத்தப் பரப்பு இன் எல்லைகள்:** வடக்கில்: திரு. இளவழகன் அவர்களின் உரிமைப்பெற்ற சொத்து; தெற்கில்: திரு. முருகவேல் அவர்களின் உரிமைப்பெற்ற சொத்து; கிழக்கில்: திரு. நாகராஜன் அவர்களின் உரிமைப்பெற்ற சொத்து; மேற்கில்: கக்கன் தெரு; நாற்பரப்புகள்: வட புறம் - 60அடி; தென் புறம் - 60அடி; கிழக்கு புறம் - 22அடி; மேற்கு புறம் - 22 அடி; கூட்டுப்பரப்பளவு 1320சதுர அடி.

| குறைந்தபட்சகேட்பு விலை ₹ 48,60,000/- | டேவணித்தொகை ₹ 4,86,000/- | ஏலஉயர்வுத்தொகை ₹ 25,000/- |
|---|---|---|

| சொத்தினை பார்வையிடும் தேதி மற்றும் நேரம் | 25.08.2026 அன்று காலை 11 மணி முதல் மாலை 4 மணி வரை |
|---|---|

| மின் ஏல தேதி மற்றும் நேரம் | 31.08.2026 | நேரம் : காலை 11.00 மணி முதல் நண்பகல் 12.00 மணி வரை | (5 நிமிட காலநீட்டிப்புடன் விற்பனை தொடர்ந்து நடைபெறும்) |
|---|---|---|---|

டேவணித் தொகை செலுத்த கடைசி தேதி: விருப்பமுள்ள ஏலதாரர் குறைந்தபட்ச கேட்பு விலையில் 10% EMD டேவணித் தொகையினை M/s PSB Alliance Private Limited (baanknet) இன் இணையதளத்தில் நேரடியாக 30.08.2026 அன்று மாலை 5 மணிக்குள் செலுத்த வேண்டும்.

மின் ஏலம் பற்றிய விரிவான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு கனரா வங்கியின் இணையதளத்தில் (www.canarabank.com) "E- Auction" இணைப்பில் தெரிந்து கொள்ளலாம் அல்லது கனரா வங்கி, சென்னை, சிறப்பு சொத்து மீட்பு மேலாண்மை கிளை II [7901] , எண்.9 & 10, சர் தியாகராய சாலை, தியாகராய நகர், சென்னை-17. கைபேசி எண்.9740145622, மின்னஞ்சல் cb7901@canarabank.com மூலமாகவோ (அல்லது) (M/s PSB Alliance Pvt. Ltd), BAANKNET போர்டல், கைபேசி எண். 8291220220, மின்னஞ்சல்: support.BAANKNET@psballiance.com. உதவி சேவை மையத்தை தொடர்பு கொள்ளலாம்.

Portal of E-Auction:https://baanknet.com

தேதி : 13.08.2026 இடம் : சென்னை

அதிகாரபூர்வ அதிகாரி, கனரா வங்கி

ஞாயிற்றுக்கிழமைதோறும் தினமணி கதிர் இளமை! புதுமை! இனிமை!